**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 77 / 2019**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW5<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Gurunathan |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10th day of November, 2025.

**(A1, A2 are present)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை** :

நான் தற்போது நசரத்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டி வருகிறேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. 2018ஆம் வருடம் மதியம் சவாரிக்கு பூந்தமல்லியிலிருந்து பாப்பன்சத்திரத்திற்கு ஆட்டோ ஓட்டிக்கொண்டு சவாரிக்கு சென்றேன். பாப்பன்சத்திரத்திரம் பஸ் ஸ்டாண்ட் அருகில் மக்கள் கூட்டமாக இருந்தார்கள். பஸ் நின்று

கொண்டிருந்தது. பஸ்ஸின் கண்ணாடி உடைந்திருந்தது. தடம் எண் 202 ஆகும். போலீசார் என்னை அழைத்து பஸ் கண்ணாடி உடைந்ததற்காக கையொப்பம் போட சொன்னார்கள் படம் வரைந்தார்கள் என்னை 2 இடங்களில் கையொப்பம் போட சொன்னார்கள். நான் கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் என் கையொப்பம் ஆகும். என்னுடன் மற்றொருவர் கையொப்பம் போட்டார் அவர் பெயர் எனக்கு தெரியவில்லை. உடைந்த கண்ணாடியை எடுத்தார்கள் அதற்கொரு கையொப்பமிட்டேன். பார்வை மகஜிரில் உள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் என் கையொப்பம் ஆகும். காவல்நிலையத்திற்கு என்னை அழைத்து சென்று இதுகுறித்து என்னை விசாரித்தார்கள். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

நான் எத்தனை வருடங்களாக ஆட்டோ ஓட்டுகிறேன் என்றால் 15 வருடங்களாக ஆட்டோ ஓட்டி வருகிறேன். நான் சவாரியை இறக்கிவிட்டுவிட்டு வந்து கொண்டிருந்தேன். ஒருவர் ஏற்ற முடியுமா என்று கேட்டார் அப்போது தான் அருகில் பஸ் நின்று கொண்டிருந்தது என்னவென்று வேடிக்கை பார்த்தேன். போலீசார் என்னிடம் கையொப்பம் போட சொன்னார்கள் என்றால் சரிதான். வரைபடத்தில் என்ன வரைந்திருந்தார்கள் என்றால் படம் வரைந்திருந்தார்கள் அதில் என்ன இருந்தது என்ற விவரம் தெரியாது. பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது. நான் சம்பவயிடத்தில் கையொப்பமிடவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.
Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.